# சிறு துளி

இன்பமான இல்லறவாழ்வின் இனிமையான கட்டத்துக்கு வந்திருந்தாள் உமா. கணவனுடன் தனிக் குடித்தனம் தொடங்கியிருந்தாள். அவளுடைய இல்லம் சின்னஞ்சிறிதுதான். எனினும் அவளே அதன் தலைவி. அவள் கணவன் சந்துரு அதன் தலைவன். பெரிய பங்களாவிலே இருந்தபொழுது அவளுக்கு வராத பதவியும் சலுகையும் உயர்வும் இப்பொழுது வந்தன.

வாசலில் ஒரு சிறு பொருள் வாங்குவதில் கூட அவள் இன்று பெருமிதம் அடைந்தாள். ஒரு டஜன் சட்டைப் பொத்தான்கூட முழு உரிமையுடன் தன் சொந்தத் தீர்மானத்துடன் வாங்கிக்கொள்ள இயலாதிருந்த அவள், இப்பொழுது தனக்குத் தேவையான பொருள்களை மட்டுமின்றிக் குடும்பத்துக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் வாங்க உரிமை படைத்துவிட்டாள். வாசலிலே காய்கறி கனி வாங்கும் பொழுதும் அவள் முகத்திலே அலாதிப் பொலிவு நிலவும்.

"வெண்டைக்காய்க்கு இந்த மாதிரி நுனிக் காம்பு ஒடிந்தால்தான் இளசாக்கும்!" என்று கணவனிடம் சொல்லும்பொழுதோ, "எங்களுக்கும் அரைச் சேர் தக்காளிப்பழம் வாங்கினேன், மாமி!" என்று ஒருவரிடம் சொல்லிக் கொள்ளும்பொழுதோ, அவள் குரலிலே கம்பீரமும் கண்களிலே களிப்பும் இழைந்து நெளியும்.

வாசலிலே விற்க வரும் காய்கறிக் கூடைக்காரரும் அவளிடம் வந்து சிரத்தையாக, "வாங்கு அம்மா" என்பார்கள். ஏனெனில், உமா அவர்களிடம் அதிகக் கண்டிப்புக் காட்டிப் பேரம் செய்யமாட்டாள். அரையணா ஓரணாவில் விற்பனையாளருக்கும் அவளுக்கும் வித்தியாசம் வரும்பொழுது, உமாதான் விட்டுக்கொடுத்துவிடுவாள்.

ஒரு ரூபாய் என்று விலை சொன்னால் உமா பத்து அல்லது பதினோரணாவிலே விலை கேட்கத் துவங்கி, இரண்டே தாவிலே பதின்மூன்று அணாவுக்கு வந்துவிடுவாள். பக்கத்தகத்துக் கமலம் பாதி விலையிலிருந்து துவங்கி ஏழெட்டுத் தடவை விலை உயர்த்தி உயர்த்திப் பன்னிரண்டணா என்று அதே பணம் வாங்கியது உமாவுக்குத் தெரியும். எனினும், ஓரணா விஷத்திலே ஏழையுடன் வாதாடுவதில் உமாவுக்கு விருப்பம் இல்லை'; அவள் மனத்தில் இருந்த உற்சாகமும் இன்பமும் அவளைப் பெருந்தன்மையுடன் இருக்கும்படியே தூண்டி வந்தன.

கமலம் தான் வாங்கின விலையைச் சொல்லும்பொழுதுகூட உமா, "என்னவோ வாங்கி விட்டேன்!" என்றுதான் சொல்வாள். 'ஏழையைப் பிழிவானேன்?' என்று தான் நினைத்ததைக் கூறமாட்டாள். ஏழையிடம் விட்டுக்கொடுத்ததாகச் சொல்லிக்கொள்வதிலே பெருந்தன்மை இருப்பதாக நினைக்கவில்லை உமா. அவளுடனே ஒன்றியிருந்தது பெருந்தன்மை, கனலொடு சூடுபோல.

ஆனால் கமலம் இந்த விஷயத்திலே உமாவுக்கு முற்றும் மாறாகவே இருந்தாள். வலுவிலே வந்து தான் பண்டம் பாடி மலிவாக வாங்கிவிட்ட பெருமையைச் சொல்லிக்கொள்வாள். "எட்டணாவுக்குக் குறையவேமாட்டேன் என்றான். ஏழே காலணாவுக்கு வாங்கிவிட்டேன்" என்று கமலம் கூறும்பொழுது உமா, 'இப்படியும் பைஸா பேரம் செய்வது நியாயந்தானா?" என்று நினைப்பாள். ஆனால் வெளிப்படக் கேட்கமாட்டாள்.

பண்டம் பாடி வாசலில் வாங்கும்பொழுது உமா தன் உதவியை நாடுவாள், நாட வேண்டும் என்று கமலம் விரும்பினாளோ என்னவோ? ஆனால் உமாவுக்குக் கமலத்தின் உதவி வேண்டுமென்ற எண்ணம் எழவே இல்லை. கொஞ்சம் பைஸா அதிகம்

கொடுத்துவிடுவதிலே மான நஷ்டமோ பொருள் நஷ்டமோ இருப்பதாக உமா நினைத்தால்தானே?

இரண்டொரு முறை கணவனிடம், "பாவம்! அரையணா ஓரணாவிலே வாதாடுவானேன் என்று தோன்றுகிறது" என்றாள். அவள் கணவன் சந்துருவும் உமாவின் போக்கை ஒட்டியே பேசினான். "ஆமாம் நிஜந்தான். அதெல்லாம் பரவாயில்லை!" என்று சொல்லிவிட்டான். அதனால் உமாவின் பெருந்தன்மையான எண்ணப் போக்குக்குத் தடையே ஏற்படவில்லை. "நமக்கு ஓரணா அரையணா லாபம் என்றால், விற்பவனுக்கு அதுவே பெரிய நஷ்டம். நமக்கு அந்த லாபம் வேண்டாம்; அவனுக்கே அது லாபமாக இருக்கட்டும்" என்று நினைக்கும் உமா குடும்ப நிர்வாக ஆர்வமும் இளகிய மனமும் குன்றாதவளாய் இருந்து வந்தாள்.

அக்கம் பக்கத்தவரைவிட ஓரணா அதிகம் கொடுத்துக் காய்கறி வாங்குவதிலே அவள் பெருமையும் அடையவில்லை; சிறுமையும் அடையவில்லை. பழைய காகிதம் போடும்பொழுது இரண்டணா நாலணாக் குறைவாகப் பெற்றுக் கொள்வதிலும் வருத்தமோ கர்வமோ கொள்ளவில்லை. ஆனால் உமாவின் இந்த அடக்கமான மனப்பான்மையை அவளுக்கு இருந்த பொறுப்பு நீடிக்கவிடவில்லை. நீர்த்துளிகள் தழல்மீது விழுந்தன.

ஒரு மாதம் இன்ஷூரன்ஸ் ப்ரீமியம் கட்டவேண்டி வந்தது. இன்னும் சில பெரும்படிச் செலவுகளும் சோதனைபோலக் கூடி வந்தன. பணத்துக்கு இழுப்பாக இருந்தது. சமாளித்து விடலாம் என்று தெம்புடன் இருந்த தம்பதிகள், உற்சாகம் குன்றியிருக்கலாயினர். கடன் வாங்கியே அறியாத அவ்விருவரும் வெகுவாகக் கூசிக் கூசி இரண்டோர் இடங்களிலே சிறிது தொகை கடன் வாங்கினார்கள். அந்தக் கடன் தொகையிலேகூட ஒரு ரூபாய்தான் மிச்சம். ஆனால் மாதம் முடிய இன்னும் பத்துநாள் மிச்சம்!

உமா ஏதோ இரண்டொரு கறிகாய் வாங்கினாள். அந்த ஒரு ரூபாயும் தீர்ந்தது.

மறுநாள் காலை சமையல் செய்யும்பொழுது உமா கணவனிடம் வந்து, "ஓரணா இருக்குமா?" என்று கேட்டாள்.

உதட்டைப் பிதுக்கினான் சந்துரு, அவளைப் பார்த்தவாறே. "பச்சை மிளகாய் இருந்தால் மோர்க் குழம்புக்கு நன்றாயிருக்கும். எப்படிப் பச்சை மிளகாய் இல்லாமல் பண்ணுவது?" என்றாள் உமா; கணவனுக்கு ருசியாகச் சமைத்துப் போடவேண்டும் என்ற அக்கறை அவளுக்கு. பச்சை மிளகாய் இல்லாமல் சமைக்க முடியாது என்று ஒரு பெண் சொல்கிறாளே என்ற கோபமோ, காசு இல்லாத கோபமோ, சந்துரு, "மோர்க் குழம்பே வேண்டாம்; பச்சை மிளகாய் இல்லாமலேயே சமையல் பண்ணு" என்று சற்றுப் படபடப்புடனே சொன்னான்.

உமாவுக்கும் சற்று ரோசம் வந்துவிட்டது. "அப்புறம் குழம்பு நன்றாயில்லை என்றால் என் தப்பா? உம், என்னவோ ஓரணாக்குக்கூடக் கரிச்சுப் போச்சே!" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள்.

அன்று சமையலை மனக்குறையுடன் தான் முடித்தாள். பிற்பகல் கமலம் பேசவந்தாள்.

"நேற்று வந்திருந்த சேப்பங்கிழங்கும், வாழைக்காயும் ரொம்ப நல்ல காய். நீ என்ன வாங்கினாய்?" என்று கமலந்தான் காய்கறி விஷயம் துவங்கினாள்.

"நானும் இந்த இரண்டுந்தான் வாங்கிப் போட்டேன், நாலு நாளைக்கு ஆகட்டுமென்று!" என்று பதில் அளித்தாள் உமா.

விலையைப் பற்றி உடனே கேட்டாள் கமலம். உமா வாங்கிய அளவு அதே இரண்டு காய்கறிகளையும், ஓரணா பச்சைமிளகாய், ஓரணா இஞ்சி, மொத்தம் ஒரு ரூபாய்க்குக் கமலம் வாங்கினாள் என்பது தெரிந்ததும் உமா சற்றே திடுக்கிட்டுவிட்டாள்.

'இந்த மாதிரி செட்டும் சூடிக்கையுந்தான் குடித்தனத்தைப் பரிமளிக்கச் செய்யும் போலும்! கமலத்தைப் போல வாங்கியிருந்தால் குழம்புக்கு வாசனையாய்ப் பச்சை மிளகாய் இருந்திருக்கும்! அது மட்டுமா? நாளைக்கும் இருந்திருக்கும்! அப்புறம், இஞ்சி?"

உமாவின் மனம் கலக்கமுற்றது. குடித்தனத்தைச் செட்டும் சீருமாய் நடத்தத் தனக்குத்தான் தெரியவில்லையோ?

அன்றிரவு கமலத்தின் கணவன் சந்துருவுடன் பேச வந்திருந்தான். சந்துரு, "ஒரு பத்து ரூபாய் இருந்தால் கொடப்பா" என்று கேட்டான் நண்பனை.

"அதற்கு என்ன? இருந்தால் தருகிறேன். கமலம் ஏதாவது வைத்திருப்பாள்" என்றான் கமலத்தின் கணவன்.

பேசாமலே இருந்தான் சந்துரு.

"ஏன் இவர் ஒன்றுமே சொல்லவில்லை?" என்று கேட்டது உமாவின் மனம், அசட்டுத்தனமாக.

'அவளுக்குச் சிக்கனம் தெரியாது, பணம் மீத்து வைக்க!' என்று சந்துரு சொல்லியிருந்தால் வருந்தியிருக்கமாட்டாளோ என்னவோ, உமா. அவன் ஒன்றும் சொல்லாதது இந்தச் சமயத்திலே ஒரு மாதிரி இருந்தது அவளுக்கு.

உமாவின் உள்ளத்திலே வேதனை புகுந்தது. செட்டும் கட்டுமாக இருப்பதிலேதான் மனைவிக்குப் பெருமையா? அதனால்தானோ கமலம் மலிவாகத்தான் வாங்குவதைப் பற்றிப் பெருமையுடன் சொல்கிறாள்? கணவனின் வருமானத்திலே ஜாக்கிரதையாகச் செலவு செய்வதால் கணவனுக்கு உபகாரம் மட்டுமல்ல, பெருமையுங்கூட. ஆம்; கமலம் பணம் வைத்திருப்பாள் என்று நம்பிக்கையுடன் சொன்னார் அல்லவா அவள் கணவர்? கடன் தந்து உதவக் கூடிய நிலையில் அவர் இருப்பதற்குக் காரணம், கமலம்.

கடன் வாங்கும்படியாகத் தன் கணவனுக்கு நிலைமை ஏற்படக் காரணம், தான் தானோ?

சேசே! அப்படியும் இருக்குமா? அத்தனை வித்தியாசம் வந்துவிடுமா, இந்தக் குடும்பச் சிக்கனத்தால்? ஏன்? வரக்கூடும். அன்று வாசலில் வாங்கிய புடைவைக்குக் கமலம் கொடுத்தவிலை, தான் கொடுத்த விலையைவிட ஒரு ரூபாய் குறைவு! ஓரணாவிலே வந்துவிடும் அலக்ஷ்யந்தான் எல்லாவற்றிலும் வரும். சிறு துளி பெரு வெள்ளம்.

ஏதேதோ எண்ணி மனத்தைக் குழப்பிக்கொண்டு, கடைசியிலே தன்மேல் பிசகு என்ற முடிவுக்கு வந்தாள் அவள்.

மறுநாள் கடிதம் ஒன்று வந்தது. "சட், என்ன தொல்லை!" என்று அதைப் பார்த்து முணுமுணுத்தான் சந்துரு.

"ஏன், என்ன?" என்று கவலையுடன் கேட்டாள் உமா.

"இன்ஷுரன்ஸ் ப்ரீமியம் கட்டினதிலே ஓரணா வித்தியாசம் வந்துடுத்தாம்! ஓரணா ஸ்டாம்பு அனுப்பிச் சரிக்கட்ட, இரண்டணாக் கவர் இப்போது தபாலாபீஸிலிருந்து வாங்கிக் கொண்டு வரவேணும்; போய் வருகிறேன்!" என்று சட்டை போட்டுக் கொள்ளத் துவங்கினான் சந்துரு.

"கவர் என்னிடம் இருக்கிறதே ஒன்று; தருகிறேனே!" என்றாள் உமா.

"இருக்கிறதா? கொடு! நல்ல வேளை, நடையும் லாபம் ஆச்சு!" என்றான் சந்துரு. அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய உவகைக் குறியைக் கண்ட உமாவின் மனத்திலே அலாதி இன்பம் சுரந்தது. கவரைக் கொணர்ந்தாள்.

சந்துரு கவரைத் தபாலில் போடத் தயார் செய்துவிட்டான். உமா ஒரு சந்தேகம் கேட்க வந்தாள்.

"ஆமாம்! படே இன்ஷுரன்ஸ் கம்பெனி இந்த ஓரணா இண்டம் பார்க்கிறதே. இதென்ன இப்படி?" என்று கேட்டாள் உமா; அவளுக்கு இந்த விஷயம் வேடிக்கையாக இருந்தது.

"எத்தனை ஆயிரம் ஓரணாக்கள் நஷ்டமாகிவிடும்? அவர்கள் கணக்காகத்தான் இருப்பார்கள்" என்று சர்வ சகஜமாகச் சொல்லிவிட்டு மேஜையருகினின்று எழுந்தான் சந்துரு.

"இப்போது தெரிவிக்க அவனுக்கு ஒரு முக்காலணாக் கார்டு செலவாகிவிட்டதே! நீங்களும் இரண்டணாக் கவர் போடவேண்டியிருக்கிறதே, ஓரணா ஸ்டாம்பு வைத்து!...... பைத்தியக்காரத்தனம் இல்லையோ?"

I am missing a page.

காய் வாங்கி முடிவு செய்து, நாலணாக் காசு கொணர்ந்து, "காலணாக் கொடு" என்றாள்.

காலணா இருக்கவில்லை கிழவனிடம். கமலத்தின் வீட்டிலே பேரம் நடக்கவில்லை போலும்!

"நாளைக்குத்தான் அம்மா" என்றான் அவன்.

"சரி" என்று நாணயத்தைப் பெற்றுக் கொண்ட உமாவுக்கு, "நாலணாவைத்தான் எடுத்துண்டு போயேன்!" என்று சொல்லவே நாத்துடித்தது. தடுமாறினாள். ஆனால் அவளுடைய இளகிய இயல்பு மேலிட்டு நிற்கவே, அதைச் சொல்லிவிட்டாள். காயைக் கூடையிலே போட்டாள்.

"சரி, இந்தாம்மா இஞ்சித்துண்டு" என்று இஞ்சித்துண்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தான் கிழவன்.

'ஏதோ லாபம் வியாபாரத்திலே இருக்கக் கண்டுதான் இந்தச் சுய கௌரவம்' என்று நினைத்தாள் உமா. ஆனால் கிழவனின் இயல்பு அவள் இருதயத்திலே மதிப்புப் பெற்றுவிட்டது.

மறுநாள் அதே கிழவன் வியாபாரத்துக்கு வந்தபொழுது மீண்டும் பேரம் நடந்தது. அன்று உமாவிடம் கண்டிப்புடன் பேசினான் கிழவன். ஏழை கோழைத்தனத்தைக் கழற்றி ஒதுக்கியிருந்தான்.

"நேத்து நாழியாயிட்டதுன்னு சரக்கை நஷ்டத்துக்கே வித்துப்புட்டேனங்கம்மா. நேத்துக் கையைக் கடிச்ச பணத்தை இன்னிக்கு எடுக்க முடியாட்டியும், இன்னைக்கும் நஷ்டம் வரக் கட்டாது அம்மா. இதுக்குக் குறைஞ்சு கட்டி வராது எனக்கு" என்றான் கிழவன், உறுதியாக. இந்தப் பேச்சு, சிறந்த பச்சிலையாகிவிட்டது.

நல்ல பாலிலே துளி நஞ்சு விழுந்ததையும் பொருட் செய்யாது 'செட்டுங்கட்டுமாக' அதைப்பருகியிருந்தாள் உமா. இப்பொழுது சிறுதுளியிலும் சிறந்த குணம் காட்டும் மாற்று மருந்தும் நேரே அவள் நெஞ்சிலே விழுந்துவிட்டது.

உமா தன் பிடியைத் தளர்த்திக் கிழவன் சொன்ன விலைக்கே காய்கறி வாங்கினாள். காசு கொணர்ந்து தரும்பொழுது மட்டும், கிழவனை நோக்கி, "நேற்று, நஷ்டப்பட்டுக் கொண்டு தருவானேன், அப்பா? சரியாகவே, தருகிறதுதானே? நேற்றுக் காலணா அதிகம். இருந்துவிட்டுப் போகட்டும் என்றேனே நான்! ரொம்பக் காரியமாய் இஞ்சித் துண்டம் கொடுத்தாயே! நஷ்டமானால் போடுவாயா?" என்று கேட்டாள்.

"பின்னே பிச்சைக்காசுக் கணக்கா அந்தக் காலணா எதுக்கம்மா எனக்கு? பேரம் நடந்த பிற்பாடு கணக்காகத்தானே இருக்கவேணும்?" என்று கூறியவாறே கூடையைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டான் கிழவன்.

உமா பிரமித்தாள்! ஆம், பேரம் முடியும் முன் காலணா அதிகமாகி வந்தாலும் அது லாபமாகும். பேரம் முடிந்தபின் அரையணா அதிகம் வந்தாலும் அது பிச்சைக்காசு! மானமாய் வியாபாரம் செய்பவனின் மனப்போக்கு இப்படி இருப்பது இயற்கைதான்.

உமாவின் அடக்கமான இளகிய இயல்பு விழித்துக்கொண்டது; புத்திருந்த சாம்பல் ஒன்றாகத் திரண்டு உதிர்ந்தது; கனல் ஜொலித்தது.

இன்று கணவனிடம் இந்தச் சிறு சம்பவத்திலுள்ள பெரிய விஷயத்தை அவள் தனக்கு உரிய விளக்கங்களுடனும் பரிவுடனும் சொன்னாள். கடைசியில், "இந்த ஒரு மாதமாக நான் கண்டிப்பும் கறாருமாகப் பைஸா பேரம் பண்ணினதிலே, ஒரு சினிமாவுக்கு நமக்கு வேண்டிய பணங்கூடச் சேர்ந்திருக்காது. ஆனால் மனசு மட்டும் கல்லாயிடுத்துப் போல் இருக்கு!" என்றாள்.

சந்துரு துணுக்குற்றான். "அடபாவமே! உன்னை யார் ஏழைகளிடம் இப்படி இருக்கச் சொன்னது? இந்தப் பைஸா பேரத்திலே பின்னே நாம் மாடிவீடு கட்டிவிடுவோமோ? ஏழைக்குத்தான் காலணா அரையணா, புளி உப்புக்காவது உதவும்" என்றான் அவன்.

அன்று அவள் கணவன் அவளை ஆமோதித்தான். பைஸா பேரத்திலே அவனுக்கு விருப்பு இல்லை என்பது புலனாயிற்று. இன்று இவள் செய்ததை அவன் கோபித்தான், பைஸா பேரத்திலே அவனுக்கு விருப்பு இல்லை, அருவருப்புத்தான் என்பது நிச்சயம். கணவனின் இந்த இரண்டு கூற்றுகளிலே சிறு துளி வித்தியாசம்; உமாவுக்கு மாபெரும் துணை!

**********

(கலைமகள், மார்ச், 1951)